செ.வெ.எண்:37 நாள்:20.02.2018

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கரூர் மாவட்டம்**

**பத்திரிக்கை செய்தி**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கரூர் மாவட்டத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் கபடிப் போட்டி கரூர் திருவள்ளுவர் நகராட்சி விளையாட்டு மைதானத்தில் 24.02.2018 முதல் 27.02.2018 வரை நடைபெற உள்ளது.

இது குறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கு.கோவிந்தராஜ் , இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான கபடி விளையாட்டுப் போட்டியில் தமிழகம் முழுவதிலும் உள்ள 32 மாவட்டங்களில் இருந்து மாவட்ட அளவில் தேர்வு பெற்ற வீரர்/வீராங்கனைகள் மொத்தம் 768 நபர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக பயணப்படி/தினப்படி மற்றும் போட்டியில் முதலிடம் பெறும் அணிகளுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ஆண்/பெண்களுக்கு 24 நபர்களுக்கு , ரூ. 24.00 இலட்சமும் , இரண்டாமிடம் பெறுபவர்களுக்கு ரூ. 75000/–ஆயிரம் வீதம், ஆண்/பெண்களுக்கு 24 நபர்களுக்கு, தொகை ரூ. 18.00 இலட்சமும், மூன்றாமிடம் பெறுபவர்களுக்கு ரூ. 50000/– ஆயிரம் வீதம் ஆண்/பெண்களுக்கு 24 நபர்களுக்கு, தொகை ரூ. 12.00 இலட்சமும் மற்றும் கோப்பைகளும் வழங்கப்படும் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கு. திரு கு.கோவிந்தராஜ் , இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்.

**வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**